செய்தி வெளியீடு **எண்.1020** **நாள் 22.11.2008**

**பொது விநியோகத் திட்டத்தின் மூலம் நியாயவிலைக் கடைகளில் பொது மக்கள் பச்சரிசி அல்லது புழுங்கல் அரிசி எதை வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம்.**

**மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் அறிவிப்பு**

தமிழ்நாட்டில் தற்போது அரிசி இருப்பு நிலைமை மிகவும் திருப்திகரமாக உள்ளது. அனைத்து கிடங்குகளிலும் புழுங்கல் அரிசியும், பச்சரிசியும் தேவைக்கேற்ப இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாக கொள்முதல் செய்யப்படும் நெல்லில் அதிகப்படியாக புழுங்கலரிசி தயார் செய்யப்படுகிறது. மேலும், மத்திய அரசினால் மாதந்தோறும் ஆந்திரப்பிரதேசத்திலிருந்து புழுங்கல் அரிசியும், பஞ்சாப், சத்தீஸ்கர் மாநிலங்களிலிருந்து பச்சரிசியையும் தேவையின் அடிப்படையில் பெறப்படுகிறது.

பொது மக்களுடைய தேவையின் அடிப்படையில் அவர்களுடைய குடும்ப அட்டைக்குரிய அளவில் பச்சரிசியோ அல்லது புழுங்கலரிசியோ எதை வேண்டுமானாலும் வழங்க வேண்டும் என்று அனைத்து அலுவலர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. சென்னை (வடக்கு) மண்டலத்தில் 4.234 மெ.டன் புழுங்கல் அரிசியும், 5,389 மெ.டன் பச்சரிசியும், சென்னை (தெற்கு) மண்டலத்தில் 3,819 மெ.டன் புழுங்கல் அரிசி மற்றும் 4,312 மெ.டன் பச்சரிசியும் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதமும் 26ந் தேதி முதல் 5ந் தேதி வரை அம்மாதத் தேவையின் அடிப்படையில் 60 சதவீத அரிசி முன்நகர்வு (Advance Movement) செய்யப்படுகிறது. அதேபோல் 6–ந் தேதி முதல் 15–ந் தேதிவரை 40 சதவீத அரிசி நகர்வு செய்யப்படுகிறது. அனைத்து தரப்பினரும் புழுங்கல் அரிசியாகவோ அல்லது பச்சரிசியாகவோ வாங்கும்போது ஏதாவது ஒரு அரிசியின் தேவை அதிகமாகிறது. அப்படிப்பட்ட சமயங்களில் பொதுமக்கள் பொறுத்திருந்து இரண்டாவதாக 40 சதவீதம் நகர்வு செய்தபின் வேண்டிய அரிசியை வாங்கிக் கொள்ளலாம். மாதம் முழுவதும் எப்போது வேண்டுமானாலும் குடும்ப அட்டைகளுக்குரிய அளவில் புழுங்கல் அரிசியாகவோ அல்லது பச்சரியாகவோ பொது மக்கள் பெற்றுக் கொள்ள அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நியாயவிலைக் கடைகளுக்கும் மின்னணு தராசுகள் (Electronic balance) வழங்கப்பட்டுள்ளது. இந்த மின்னணு தராசுகள் பழுதடையும்போது உபயோகப்படுத்துவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கூடுதலாக மின்னணு தராசுகள் வழங்கப்பட்டுள்ளது. நியாயவிலைக் கடை விற்பனையாளர்கள் மின்னணு தராசுகளில் தான் எடை போட்டு வழங்க வேண்டும் என்றும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. சில நியாயவிலைக் கடைகளில் விற்பனையாளர்கள் பழைய தராசுகளை பயன்படுத்துவதாக தகவல்கள் பெறப்பட்டுள்ளதால், பழைய தராசுகளை திரும்ப ஒப்படைக்கப்பட வேண்டும் என்று அனைத்து நியாயவிலைக் கடைகளுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

பொது விநியோகத் திட்டம் தொடர்பாக ஏதேனும் குறைபாடுகள் இருப்பின், பொது மக்கள் சென்னை (வடக்கு) துணை ஆணையர் அலுவலகத்திலுள்ள கட்டுப்பாட்டு அறை தொலைபேசி எண். 28551026 சென்னை (தெற்கு) துணை ஆணையர் அலுவலகத்தில்லுள்ள கட்டுப்பாட்டு அறை தொலைபேசி எண். 28551028 ஆகியவற்றிலும், பிற மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட கட்டுப்பாட்டு அறைகளிலுள்ள தொலைபேசி எண்களுக்கு தகவல் தெரிவித்தால் உடனடியாக அவர்களுடைய குறைகள் நிவர்த்தி செய்யப்படும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.**